ஒப்புக்கொண்டிருக்கிறார். அதற்கு அரசாங்கத்தின் சம்மதம் கேட்டு எழுதியனுப்பப்பட்டிருக்கிறது. அரசாங்கம் அதை பரிசீலனை செய்து, சம்பந்தப்பட்ட வேறு இலாகாவுக்கு எழுதியனுப்பும்படி கேட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, விரைவிலே பஞ்சாயத்து யூனியன் நடத்த ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம்.

மதுக்கரை ஏ.சி.சி. சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து வெளிப்படும் புகை

*197 வினா.—**திரு. என். மருதாசலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயமுத்தூர், மதுக்கரை ஏ.சி.சி. சிமெண்ட் தொழிற்சாலையில் பெரிய அளவில் வெளிப்படுகின்ற புகையை நவீன பில்டர் முறையை பயன்படுத்தி கட்டுப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, சிமெண்ட் தொழிற்சாலையில் வெளியாகின்ற புகையினால் சுற்றுவட்டாரத்தில் ஐந்து மைல் விஸ்தீரணத்திற்கு புல்பூண்டுகள்கூட முளைப்பதில்லை. மேலும் பக்கத்தில் இருக்கிற கிராமங்களிலுள்ள மக்களுக்கு சுகாதாரக் கேடுகள் ஏற்படுகின்றன. ஆகவே, புகையைக் கட்டுப்படுத்தி, உள்ளே இழுத்துக்கொள்கிற வகையில் நவீன பில்டர்களை உபயோகிக்க வேண்டுமென்று ஆலை முதலாளிக்கு அரசாங்கம் உத்தரவிடுமா? அப்படிச் செய்தால்தான் பக்கத்தில் இருக்கிற கிராமங்களிலுள்ள மக்களுக்கு சௌகரியம் ஏற்படும் என்பதை உணர்ந்து அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்த சிமெண்ட் தொழிற்சாலை தமிழகத்தில் ஏற்பட்ட மிகப் பழைய தொழிற்சாலைகளில் ஒன்றாகும். அதனுடைய புகை போகின்ற அமைப்பை மாற்றியமைக்க நவீன முறையில் 'எலக்ட்ரோ ஸ்டேடிக் பிரிசிபிடேட்டார்' என்ற சாதனம் அதற்காக அமைக்கப்பட வேண்டும். அந்த சாதனத்தைப் பொருத்த வேண்டுமென்றால், அதை வெளிநாட்டிலிருந்துதான் வரவழைக்க வேண்டும்; அல்லது அந்த சாதனத்தின் பெரும்பகுதி வரவழைக்கப்பட்டு, உள்நாட்டுச் சாதனங்களோடு பொருத்தியமைக்க வேண்டும். வெளிநாடுகளிலிருந்து அந்தச் சாதனத்தையோ, அதன் மற்ற பாகங்களையோ வரவழைக்க வேண்டுமென்றால், அதற்கு அந்நிய நாட்டுச் செலாவணி செலவழிக்க வேண்டியிருக்கும். அதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி வேண்டும். மத்திய அரசாங்கம் இதை ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லை. Dust control by water spraying and other mechanical devices like chain screens and canvas bags' என்ற முறையில் கேன்வாஸ் பைப்புகளின் மூலம், சங்கிலிகளால் ஆன screens முறைகளால் தண்ணீரை தெளிக்கின்ற ஸ்பேரேயிங் மூலமாக செய்தால் புகையினால் வருகின்ற தூசிகள் தடுக்கப்படுகின்றன. அப்படித் தடுக்கின்ற முயற்சிகளை "Assistant Director in-charge of Industrial Hygiene" தொழில் துறையிலே சுகாதாரத்தைக் கவனிக்கின்ற துணை இயக்குநர் அவர்கள் அவ்வப்போது கவனித்து வருகிறார்கள். இந்த அளவிற்குத்தான் அரசாங்கம் நிறைவேற்றி வருகிறது, நிறைவேற்ற முடிகிறது.

1971 ஜூலை 12]

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து புகை வருவதன்மூலம் மக்களின் ஆரோக்கியம் கெட்டுவிடுகிறது. இதேமாதிரி பேப்பர் தொழிற்சாலை, இரசாயன தொழிற்சாலை இவைகளிலிருந்து புகையும், கழிவுநீரும் வெளியாகி, அந்தப் பகுதியிலுள்ள பலருடைய ஆரோக்கியத்தைக் கெடுக்கும் வகையில் காற்றும் கெடுகிறது, தண்ணீரையும் கெடுக்கிறது. தொழிற்சாலைகள் அதிகமாகிவிடுவதால் இது முக்கியமான விஷயம் என்பதை எண்ணி, ஒவ்வொரு தொழிற்சாலையையும் பரிசீலித்து, அதற்கான தடுப்பு நடவடிக்கைகளை விரைவாகச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நாம் நாட்டினுடைய பொருளாதார, தொழில் வளர்ச்சி நிலைமைகளையும் சிந்தித்தாக வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஒரு தொழிற்சாலையை அமைக்க ஒரு கோடி ரூபாய், 50 லட்சம் ரூபாய் என்ற அளவில் செலவழிக்க வேண்டியிருக்கிறது. தொழில்புரிவோர்களின் நலனுக்காகவும், சுகாதார முறைகளுக்காகவும், வேறுபல குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்காகவும் 15 லட்சம் 20 லட்சம் என்ற அளவில் செலவழித்து பாதுகாக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளினால் போதுமான முன்னேற்றம் காணமுடியவில்லை. தொழிற்சாலைகள் அதிகப்படுகின்ற சூழ்நிலை உருவாகவேண்டும். தொழிற்சாலைகளின் எண்ணிக்கை வளர்ந்து வருகிறபோது நாம் இந்த இடையூறுகளையெல்லாம் சமாளித்துத்தான் ஆக வேண்டும்.

Regulation of work in Beedy Industry

* 198 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether Central Legislation for regulating work in the Beedy Industry has been implemented in the State; and

(*b*) if not, the reasons therefor?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) 1966-ஆம் ஆண்டு பீடி-சுருட்டு தொழிலாளர்கள் (வேலை நிலைகள்) சட்டம் (மத்திய சட்டம் 32/1966) செயல்படுவதை தடை செய்து உயர்நீதி மன்றம் ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், மத்திய அரசால் ஒரு ஆறு வருஷத்திற்கு முன்பாகவே பீடித் தொழிற்சாலையில் பணியாற்றக்கூடியவர்களுக்கும் சுருட்டுத் தொழிற்சாலையில் பணியாற்றக்கூடியவர்களுக்கும் இப்படி பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய சட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத்தைத் தடைசெய்யவேண்டுமென்று கேட்டு ஹைகோர்ட்டிலே சில முதலாளிகள் மனுச்செய்து இருக்கிறார்கள். அந்தத் தடையை வெக்கேட் செய்வதற்கு அந்தச் சட்டத்தை அமல்செய்வதற்கும் ஏற்றவகையில் ஹைகோர்ட் மூலமாக துரித நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்தால் இந்தச் சட்டம் தடைசெய்யப்பட்டிருக்கிறது. இந்த வழக்கை விரைவில் முடிக்கவேண்டுமென்று அரசாங்க தலைமை வழக்கறிஞரும் அரசாங்க வழக்குரைஞரும் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். அந்த ரிட் மனுக்கள் இன்னும் முடிவுபெறா நிலையில் இருக்கின்றன.